1970 மார்ச் 2]

Posts of District Judges.

*151. Q. THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state whether selections to a number of posts of District Judges are to be made by direct recruitment shortly?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஆம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட நீதிபதி பதவிகளில் எத்தனை இடங்கள் காலியாக இருக்கின்றன? அவற்றிற்கு எத்தனை மனுக்கள் வந்திருக்கின்றன? எப்போது நிரப்பப் போகிறீர்கள்? நேரிடைத் தேர்வுகளின் மூலம் எடுக்காது, இப்போது பதவியில் உள்ளவர்களுக்கே ப்ரமோஷன் கொடுக்க அரசு முடிவு செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாவட்ட நீதிபதிகள் பதவிக்கு 293 மனுக்கள் வந்திருக்கின்றன. ஏற்கெனவே பதவியில் உள்ளவர்களுக்கு ப்ரமோஷன் கொடுப்பார்களா என்று இரண்டாவதாகக் கேட்டார். விதிகள் அப்படி இல்லை. மொத்தம் 24 இடங்கள் இருக்கின்றன. 17 இடங்களுக்கு ப்ரமோஷன் மூலம் ஃபில்லப் செய்யலாம். 7 இடங்கள் நேரிடைத் தேர்தல் மூலமே பூர்த்தி செய்ய வேண்டியிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தகுதியின் அடிப்படையிலேயே இந்த நியமனங்கள் நடைபெறுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இது தகுதியின் அடிப்படையில்தான் உயர்நீதிமன்ற நீதிபதியையும் கலந்து முடிவு செய்வார்கள் என்று நம்புகிறேன்.

திரு. கரு. சீமைச்சாமி: மாவட்ட நீதிபதிகள் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படும்போது பின்தங்கிய சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்குச் சலுகை—திறமையில் இல்லை—ஸ்தானங்கள் இரண்டு, மூன்று என்று ஒதுக்குவதில் கவனம் செலுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இதில் தகுதி என்று கூறிவிட்ட பிறகு சலுகை என்பதற்கு இடம் இல்லை.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி: மாவட்ட நீதிபதிகள் 24 பேர்களில் தாழ்த்தப்பட்டவர்கள் எத்தனை பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இன்னும் தேர்வு முடிவு பெறவில்லை.

திரு. என். கிட்டப்பா: மாவட்ட நீதிபதிகள் நியமனத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை அமுலாக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இல்லை.

திரு. கே. விநயகம் : இப்படி நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப் பட இருக்கிற மாவட்ட நீதிபதிகள் பதவிக்கு "எங்கள் கட்சிக் காரர்களுக்குத்தான் சுலபமாகக் கிடைக்கும்" என்பதான பிரச் சாரம் வெளியில் நடைபெறுகிறதே, அந்தப் புகார்களுக்கு இடமில் லாது, திறமையை அடிப்படையாக வைத்துத் தேர்வு நடை பெறுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஆண்டாண்டு காலமாக நடந்து வருகிற வழியை யொட்டித்தான் இதுவும் நடைபெறும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் குற்றச் சாட்டு இருக்கக் கூடாது என்பது விதி. திரு. விநயகம் அவர்கள். . . . .

THIRU K. VINAYAKAM: Sir, there is a rumour about it. The Government must be careful...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. விநயகம் அவர்களிடம் ரூல்ஸ் புத்தகம் இல்லை என்றால் நான் ஒரு புத்தகம் கொடுக்கச் சொல்கிறேன்.

THIRU K. VINAYAKAM: Sir, that is an insinuation.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஒன்றும் இன்சின்யு வேஷன் இல்லை.

THIRU K. VINAYAKAM: The Chair should not assume that I do not know the rules and that is too much for him to say. I am only asking a question to elicit information and it is the job of the Ministry to educate me or furnish me with more facts. The Chair should not run to the aid of the Government at every stage and try to save them. What are all these things ? Does the Chair imagine for one moment that I do not know the rules ? I know the rules long before the Chair became a Member of the Assembly. So do not try to insult me...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீண்ட நாட்களாக இருப்பத னாலேயே எல்லோருக்கும் எல்லாம் தெரிந்து விடும் என்று சொல்ல முடியாது. விதிமுறைகளில், கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு இருக்கக் கூடாது என்று இருக்கிறது. போடுகிற போதே குற்றச் சாட்டுடன் கேள்வி பிறந்தால் விதிமுறைகளை நன்றாகப் படித்தவர் என்று எப்படி நினைத்துக் கொள்ள முடியும் ?

திரு. கே. விநயகம் : ஆளும் கட்சி ஹைக்கோர்ட் வக்கீல்கள் எல்லாம் அப்படித்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிப்பட்ட குற்றச்சாட்டு கள் இங்கே கேள்வி நேரத்தில் வரக் கூடாது.

திரு. கே. விநயகம் : அவர்கள் பெயர் கெடுகிறதே என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை அவர்கள் பார்த்துக் கொள்வார்கள். அடுத்த கேள்வி 152.